18. ............. ஆற்றல் பெருமளவிலும், விலையில்லாமலும் கிடைக்கக்கூடியது. **விடை: சூரிய**

19. உயிரினவாயுவின் முக்கிய கூட்டுப்பொருள் ............. ஆகும். **விடை: மீத்தேன்**

20. நெகிழிகளை எரிப்பதினால்.............. உருவாக்கப்படுகிறது. **விடை: டையாக்ஸின்**

21. மின்னணு கழிவுகளாகிய ........... மூளை மற்றும் சுவாச மண்டலத்தை பாதிக்கின்றன. **விடை: பாதரசம்**

## II. சரியா அல்லது தவறா என கூறுக. தவறாயின் சரியான கூற்றை எழுதுக.

**1. உயிரிவாயு என்பது விலங்கு மற்றும் தாவர கழிவுகள் காற்றில்லா சூழலில் மட்கும் போது உருவாகிறது.**

**விடை:** சரி.

**2. கடல் அலை ஆற்றல் மரபுசார் ஆற்றல் மூலமாகும்.**

**விடை:** தவறு. **சரியான கூற்று :** கடல் அலை ஆற்றல் **மரபுசாரா** ஆற்றல் மூலமாகும்.

**3. சூரிய ஆற்றல் மாசு உண்டாக்குகிறது.**

**விடை:** தவறு. **சரியான கூற்று :** சூரிய ஆற்றல் மாசு **உண்டாக்குவதில்லை.**

**4. ஷேல் வாயு நிலத்தடி நீர் மட்டத்தை வெகுவாகப் பாதிக்கிறது**

**விடை:** சரி.

## III. பொருத்துக.

**1.**

| | | | |
|---|---|---|---|
| 1. | உயிரி வாயு | (i) | சிறிய குளங்கள் |
| 2. | ஊரணிகள் | (ii) | இயற்கை வாயு |
| 3. | புதைபடிவ எரிபொருள் | (iii) | ஷேல் |
| 4. | மென்மையான பாறை அடுக்கு | (iv) | கோபர் கேஸ் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iv) | (i) | (ii) | (iii) |
| இ) | (ii) | (iii) | (iv) | (i) |
| ஈ) | (iii) | (iv) | (ii) | (i) |

**விடை: ஆ) 1 - (iv), 2 - (i), 3 - (ii), 4 - (iii)**

**2.**

| I | II | III |
|---|---|---|
| PVC | மைய நரம்பு மண்டலம் | நரம்பு பாதிப்பு |
| காட்மியம் | டையாக்ஸின் | குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிப்பு |
| பாதரசம் | சிறுநீரகம் | மூளை |
| ஈயம் | சுவாச மண்டலம் | இனப்பெருக்க மண்டல பாதிப்பு |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**விடை:**

| I | II | III |
|---|---|---|
| PVC | டையாக்ஸின் | இனப்பெருக்க மண்டல பாதிப்பு |
| காட்மியம் | சிறுநீரகம் | நரம்பு பாதிப்பு |
| பாதரசம் | சுவாச மண்டலம் | மூளை |
| ஈயம் | மைய நரம்பு மண்டலம் | குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிப்பு |

## IV. கூற்று மற்றும் காரணம் வகை கேள்விகள்: பின்வரும் ஒவ்வொரு வினாக்களிலும் ஒரு கூற்றும் அதன் கீழே அதற்கான காரணமும் கொடுக்கப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள நான்கு வாக்கியங்களில் ஒன்றை சரியான பதிலாக குறிக்கவும்.

அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. மேலும், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் தருகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரியானது. ஆனால், காரணம் சரியல்ல.

ஈ) கூற்று தவறானது. ஆனால், காரணம் சரியானது.

1. **கூற்று** : CFL பல்புகள் மட்டுமே பயன்படுத்துவதன் மூலம் மின்னாற்றலை சேமிக்க முடியும்.
   **காரணம்** : CFL பல்புகள் சாதாரண பல்புகளை விட விலை அதிகமானவை. எனவே சாதாரண பல்புகளை பயன்படுத்துவதன் மூலம் நமது பணத்தையும் சேமிக்கலாம்.

**விடை: இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.**

2. **கூற்று** : ஊரணிகள் பழங்கால முறையில் மழை நீரை சேமித்தல் ஆகும்.
   **காரணம்** : ஊரணிகள் இன்றைய சூழலில் பயன் தருவது இல்லை.

**விடை: இ) கூற்று சரியானது. ஆனால், காரணம் சரியல்ல.**

3. **கூற்று** : நெல் தவிட்டினை மறுபயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளலாம்.
   **காரணம்** : இது உயிரி வாயு தயாரிக்க உதவுகிறது.

**விடை: இ) கூற்று சரியானது. ஆனால், காரணம் சரியல்ல.**

## V. ஒப்புமை.

1. புதுப்பிக்க முடியாத ஆற்றல் : தீர்ந்து விடக்கூடியது ;
   புதுப்பிக்க இயலும் ஆற்றல் : .................... **விடை: தீர்ந்து விடாதது**
2. குரோமியம் : மூச்சுத் திணறல் ; கேட்மியம் : ............................ **விடை: நரம்பு பாதிப்பு**
3. பெட்ரோல் : மோட்டார் வாகனங்கள் ; திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு : ....... **விடை: சமையல்**

## VI. குறுவினாக்கள்.

1. **தாஜ்மகால் எவ்வாறு அமிலமழையினால் பாதிக்கப்பட்டுள்ளது?**

**விடை:** மதுரா எண்ணெய் நிறுவனத்திலிருந்து வெளிவரும் சல்பர் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடுகள் தாஜ்மகாலின் வெண்ணிற பளிங்கு கற்களின் மேல் படிந்து அக்கற்களை மஞ்சள் நிறமாக மாற்றியுள்ளது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**2. வனமகோத்சவம் என்றால் என்ன?**

விடை: வனமகோத்சவம் என்பது மரக்கன்றுகள் நடுவதால் இயற்கையான காடுகள் அழிவு நிலையிருந்து பாதுகாக்கப்படுகின்றன. பலவிதமான பலனளிக்கத்தக்க மரக்கன்றுகளை நட்டு பாதுகாப்பதும் ஒரு குறிப்பிடதக்க முயற்சியாகும்.

**3. நிலக்கரி மற்றும் பெட்ரோலிய வளங்கள் பாதுகாக்கும் வழிமுறைகள் இரண்டினைக் கூறு.**

விடை: (i) மின்சாரத்தை சேமிப்பதன் மூலம் நிலக்கரி பயன்பாட்டினை குறைக்கலாம்.

(ii) மிகக் குறைந்த தூரங்களுக்கு இருசக்கர வாகனங்கள், கார்கள் ஆகியவற்றுக்குப் பதிலாக மிதிவண்டிகளைப் பயன்படுத்தலாம்.

(iii) சமைப்பதற்கு அழுத்தக் கலன்களை பயன்படுத்துவதன் மூலம் கெரோசின் மற்றும் எல்பிஜி ஆகியவற்றின் நுகர்வை குறைக்கலாம்.

**4. புதுப்பிக்க இயலாத ஆற்றல் வளங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் – வேறுபடுத்துக.**

விடை:

| எண். | புதுப்பிக்க இயலாத ஆற்றல் வளங்கள் | புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் |
|---|---|---|
| 1. | குறைந்த காலத்தில் தம்மைத்தாமே புதுப்பித்துக் கொள்ள முடியாத ஆற்றல். | இயற்கையாக தம்மை குறுகிய காலத்தில் புதுப்பித்துக் கொள்ளக் கூடியது. |
| 2. | இயற்கையில் மிகக் குறைந்த அளவே கிடைக்கிறது. | பெருமளவில் கிடைக்கிறது. |
| 3. | **எ.கா.** நிலக்கரி, இயற்கை வாயு, அணுக்கரு ஆற்றல். | **எ.கா.** உயிரி எரிபொருள், நீராற்றல். |

**5. மின்னணுக் கழிவுகளால் உண்டாகும் பாதிப்புகள் யாவை?**

விடை: **மின்னணுக் கழிவுகளால் உண்டாகும் பாதிப்புகள் :**

(i) **ஈயம் :** மனிதரில் மைய நரம்பு மண்டலத்தையும் பக்க நரம்பு மண்டலத்தையும் பாதிக்கிறது. குழந்தைகளின் மூளை வளர்ச்சியை பாதிக்கிறது.

(ii) **குரோமியம் :** மூச்சுத்திணறல் ஆஸ்துமா.

(iii) **கேட்மியம் :** சிறுநீரகம் மற்றும் கல்லீரலில் படிந்து அதன் பணிகளை பாதிக்கிறது. நரம்புகளை பாதிக்கின்றது.

(iv) **பாதரசம் :** மூளை மற்றும் சுவாச மண்டலத்தை பாதிக்கிறது.

## VII. விரிவான விடையளி.

**1. கழிவு நீர் சுத்திகரிக்கும் முறையை விளக்குக.**

விடை: வழக்கமான கழிவுநீர் சுத்திகரிப்பு முறை கீழ்க்கண்ட படிநிலைகளில் கையாளப்படுகிறது. அவையாவன: வடிகட்டுதல், காற்றேற்றம், படிவு அகற்றுதல் மற்றும் நீர் மறுசுழற்சி.

(i) **வடிகட்டுதல் :** வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் உருவாகும் கழிவு நீரில் உள்ள திடப்பொருட்களும், மண்ணும் இம்முறையில் வடிகட்டிப் பிரிக்கப்படுகிறது.

(ii) **காற்றேற்றம் :** வடிகட்டப்பட்ட கழிவு நீரானது காற்றேற்றம் செய்வதற்காக அதற்குரிய தொட்டிக்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில் நுண்ணுயிரிகள் காற்றின் உதவியுடன் உயிரிய சிதைவடைதலுக்கு உட்படுத்தப்பட்டு நீக்கப்படுகிறது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(iii) **வீழ்படிவு செயல் முறை :** இம்முறையில், நீரில் மிதந்த நிலையில் உள்ள திண்மப் பொருட்கள் நீரினடியில் வீழ்படிவாக சென்று சேருகின்றன. இவ்வாறு சேகரமாகும் வீழ்படிவுகள் சேறு போன்று காணப்படும். இது படிவு என்று குறிப்பிடப்படுகிறது.

(iv) **படிவு அகற்றுதல் :** தொட்டிகளில் சேகரமாகும் படிவுகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் பாதுகாப்பான முறையில் அகற்றப்படுகின்றன.

(v) **கிருமி நீக்குதல் :** குளோரினேற்றம் மற்றும் புறஊதா கதிர்கள் மூலம் இந்நீர் சுத்தரிக்கப்பட்டு நோயை உண்டாக்கக்கூடிய நுண்ணியிரிகள் நீக்கம் செய்யப்படுகின்றன.

(vi) **நீர் மறுசுழற்சி :** இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட நீர் வீட்டு உபயோகத்திற்கும் தொழிற்சாலை பயன்பாட்டுக்காகவும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.




**கழிவு நீர் சுத்திகரிப்பின் பல்வேறு நிலைகள்**

## VIII. உயர் சிந்தனைக்கான வினாக்கள்.

**1. உயிர் சிதைவடையும் பொருட்களினால் சூழ்நிலை மண்டலம் பாதிக்கப்படுமா? காரணம் கூறு.**

**விடை:** ஆம் பாதிக்கப்படும்.

(i) உயிர் சிதைவடையக் கூடிய பொருட்கள் சிதைவடையும் போது சில வகையான பொருட்களையும் வாயுக்களையும் வெளியேற்றுகின்றன.

(ii) அவற்றின் பொருட்களில் கொசு போன்ற உயிரினங்கள் வாழ்க்கையை நடத்துகின்றன. அவை சில நோய்களை உண்டாக்குகின்றன.

(iii) உயிரிகள் சிதைவடையாத சுழற்சியுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைந்த அளவே பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**2. ஏதேனும் இரண்டு சூரிய ஒளியின் மூலம் நடைபெறும் செயல்பாடுகளைக் கூறு.**

**விடை:** (i) சூரிய அழுத்த சமையல்கலன் உணவு தயாரிக்க பயன்படுகிறது.

(ii) துணிகளை உலர்த்தவும், மீன் போன்றவற்றை உலர வைப்பதற்கும் நாம் சூரிய ஒளியைப் பயன்படுத்துகிறோம்.

**3. அணுக்கரு ஆற்றலினால் ஏற்படும் ஏதேனும் ஒரு தீமையை குறிப்பிடு.**

**விடை:** அணுக்கரு ஆற்றல் மின்சாரமாக மாற்றப்படும் போது துணைப் பொருட்களாக சில பொருட்கள் கிடைக்கின்றன. அவை சரியான முறையில் அகற்றப்படவில்லையெனில் அவற்றால் கதிரியக்கம் ஏற்பட்டு, சுற்றுப்புற சூழ்நிலையில் பாதிப்புகள் உண்டாகும்.

☆ ☆ ☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



# அலகுத் தேர்வு

காலம் : 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

## பகுதி - I

**சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுது.** (4 × 1 = 4)

1. ............ என்பது புதுப்பிக்க இயலாத ஆற்றல் ஆகும்.
   அ) சூரிய ஆற்றல் ஆ) நீர் இ) கனிம வளங்கள் ஈ) காற்று
2. மண்ணரிப்பைத் தடுக்கப் பயன்படுவது.
   அ) காடுகள் அழிப்பு ஆ) காடுகள் / மரம் வளர்ப்பு
   இ) அதிகமாக வளர்த்தல் ஈ) தாவரப் பரப்பு நீக்கம்
3. பசுமை இல்ல விளைவு எனக் குறிப்பிடப்படுவது ..................... .
   அ) பூமி குளிர்தல் ஆ) புறஊதாக் கதிர்கள் வெளி செல்லாமல் இருத்தல்
   இ) தாவரங்கள் பயிர் செய்தல் ஈ) பூமி வெப்பமாதல்
4. புவி வெப்பமாதலின் காரணமான ஏற்படக்கூடிய விளைவு
   அ) கடல் மட்டம் உயர்தல் ஆ) பனிப்பாறைகள் உருகுதல்
   இ) தீவுக்கூட்டங்கள் மூழ்குதல் ஈ) மேலே கூறிய அனைத்தும்

## பகுதி - II

**விடையளி.** (3 × 2 = 6)

5. (i) ............ என்பது தமிழ்நாட்டிலுள்ள உயிர்க்கோளப் பாதுகாப்பு மையமாகும்.
   (ii) ஓத ஆற்றல் ............ வகை ஆற்றலாகும்.
6. **சரியா தவறா எனக்கூறு தவறு எனில் சரியான கூற்றை எழுது.**
   (i) அணு ஆற்றல் ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றலாகும்.
   (ii) சூரிய ஆற்றல் மாசு உண்டாக்குகிறது.
7. வனமகோத்சவம் என்றால் என்ன?

## பகுதி - III

**விடையளி.** (2 × 4 = 8)

8. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரிய ஆற்றல் | அ. | ஓடும் நீர் |
| 2. | பெட்ரோலியம் | ஆ. | அலைபேசி |
| 3. | புனல் மின்னாற்றல் | இ. | தீர்ந்து போகாத ஆற்றல் |
| 4. | மின்னணு சாதனம் | ஈ | தீர்ந்து போகக் கூடிய ஆற்றல் |

9. மண்ணரிப்பை நீவிர் எவ்வாறு தடுப்பீர்?

## பகுதி - IV

**விரிவான விடையளி.** (1 × 7 = 7)

10. மழைநீர் சேமிப்பு அமைப்புகள் எவ்வாறு நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றன?

☆ ☆ ☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

# அலகு 23 காட்சித் தொடர்பு

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. அசைவூட்டும் காணொளிகளை உருவாக்க பயன்படும் மென்பொருள் எது? ※※ PTA-3; HY-'23
   அ) Paint ஆ) PDF இ) MS Word ஈ) Scratch
   **விடை: ஈ) Scratch**

2. பல கோப்புகள் சேமிக்கப்படும் இடம் ※※ GMQP-'19; HY-'24
   அ) கோப்புத் தொகுப்பு ஆ) பெட்டி
   இ) Paint ஈ) ஸ்கேனர்
   **விடை: அ) கோப்புத் தொகுப்பு**

3. நிரல் (script) உருவாக்கப் பயன்படுவது எது? ※ PTA-1
   அ) Script area ஆ) Block palette இ) Stage ஈ) Sprite
   **விடை: அ) Script area**

4. நிரலாக்கத்தைத் தொகுக்கப் பயன்படுவது எது? ※ PTA-2
   அ) Inkscape ஆ) Script editor இ) Stage ஈ) Sprite
   **விடை: ஆ) Script editor**

5. பிளாக்குகளை (Block) உருவாக்க பயன்படுவது எது?
   அ) Block palette ஆ) Block menu இ) Script area ஈ) Sprite
   **விடை: ஆ) Block menu**

### II. பொருத்துக.

| | | | விடைகள் |
|---|---|---|---|
| 1. | நிரலாக்கப் பகுதி<br>Script Area | குறிப்புகளைத் தட்டச்சு செய்தல்<br>Type notes | நிரல் உருவாக்கம்<br>Build Scripts |
| 2. | கோப்புத் தொகுப்பு<br>Folder | அசைவூட்ட மென்பொருள்<br>Animation software | கோப்பு சேமிப்பு<br>Store files |
| 3. | ஸ்கிராச்சு<br>Scratch | நிரல் திருத்தி<br>Edit programs | அசைவூட்ட மென்பொருள்<br>Animation software |
| 4. | ஆடை திருத்தி<br>Costume editor | கோப்பு சேமிப்பு<br>Store files | நிரல் திருத்தி<br>Edit programs |
| 5. | நோட்பேடு<br>Notepad | நிரல் உருவாக்கம்<br>Build Scripts | குறிப்புகளைத் தட்டச்சு செய்தல்<br>Type notes |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## III. சுருக்கமாக விடையளி.

**1. ஸ்கிராச்சு (SCRATCH) என்றால் என்ன?** ※ July-'24

**விடை:** (i) அசைவூட்டல்களையும், கேலிச்சித்திரங்களையும், விளையாட்டுக்களையும் எளிதில் உருவாக்கப் பயன்படும் ஒரு **மென்பொருள்** ஸ்கிராச்சு எனப்படும்.

(ii) இது ஒரு காட்சி **நிரல் மொழி**.

**2. திருத்தி (EDITOR) குறித்தும் அதன் வகைகள் குறித்தும் எழுது.** ※ July-'23

**விடை:** ஸ்கிராச்சு சூழல் திருத்தி மூன்று பிரிவுகளைக் கொண்டது.

(1) ஸ்டேஜ் (Stage)
(2) ஸ்பிரைட் (Sprite)
(3) ஸ்கிரிப்ட் எடிட்டர் (Script editor)

(1) **ஸ்டேஜ் (மேடை) :**
 (i) ஸ்கிராச்சு சாளரத்தை திறக்கும் போது கிடைக்கும் பின்னணியை ஸ்டேஜ் என்பர்.
 (ii) இதன் பின்னணி நிறம் வெள்ளையாக இருக்கும்.

(2) **ஸ்பிரைட் :**
 (i) ஸ்கிராச்சு சாளரத்தின் பின்னணிக்கு மேல் பகுதியில் உள்ள கணினி மாந்தர்களை ஸ்பிரைட்டுகள் என்பர்.
 (ii) ஸ்பிரைட்டை தேவைக்கேற்ப மாற்றும் வசதி இந்த மென்பொருளில் உள்ளது.

(3) **ஸ்கிரிப்ட் எடிட்டர் (அ) காஸ்டியூம் (ஒப்பனை) எடிட்டர் :**
 நிரல்களையும் ஸ்பிரைட் படங்களையும் இச்சாளரத்தில் நாம் மாற்ற முடியும்.

**3. மேடை (STAGE) என்றால் என்ன? (அல்லது)**
**ஸ்கிராச்சு சூழல் திருத்தியில் மேடை (STAGE) என்பது பற்றி சிறு குறிப்பு எழுதுக.** ※ ※ Sep-2020; April-'24

**விடை:** ஸ்கிராச்சு சாளரத்தை திறக்கும் போது கிடைக்கும் **பின்னணியை** ஸ்டேஜ் என்பர்.

**4. ஸ்பிரைட் (SPRITE) என்றால் என்ன?** ※ April-'23

**விடை:** ஸ்கிராச்சு சாளரத்தில் பின்னணிக்கு மேல் பகுதியில் உள்ள **கணினி மாந்தர்களை** (Characters) ஸ்பிரைட்கள் என்பர்.

## PTA மாதிரி வினா - விடைகள்

### 1 மதிப்பெண்

**1. கணிப்பொறியில் குறிப்புகளைச் சேகரித்து வைக்க .............. பயன்படுகிறது.** ※ PTA-4

அ) Notepad ஆ) Paint இ) Scanner ஈ) Scratch

**விடை: அ) Notepad**

**2. கணினியில் இடம்பெற்றிருக்கும் செயலி மூலம் உருவாக்கப்படும் எந்த ஒரு வெளியீடும் ............. என்று குறிக்கப்படுகிறது.** ※ PTA-6

அ) கட்டளை ஆ) கோப்புத் தொகுப்பு
இ) கோப்பு ஈ) Paint

**விடை: இ) கோப்பு**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## கூடுதல் வினாக்கள்

## I. ஒரு மதிப்பெண் வினாக்கள்.

1. தேவையான நிரல்களை தேர்ந்தெடுக்க நாம் ............ பொத்தானை அழுத்த வேண்டும். **விடை: 'Start'**
2. குறிப்புகளை சேகரித்து, தொகுத்து, அச்செடுக்க பயன்படும் செயலி .......... ஆகும். **விடை: நோட்பேடு**
3. ஸ்கிரிப்ட் செயலியை திறப்பதற்கு ......... பொத்தானை அழுத்த வேண்டும். **விடை: பச்சை கொடி**
4. விண்டோஸ் மற்றும் லினக்ஸ் போன்றவை .......... க்கு உதாரணம் ஆகும். **விடை: இயக்க அமைப்பு**
5. படங்கள் வழியாக குறிப்பிட்ட கருத்தினை நமக்கு எளிதில் புரிய வைப்பது .......... ஆகும். **விடை: காட்சி தொடர்பு சாதனங்கள்**
6. கணினியை இயக்கத் தொடங்கியவுடன் இடப்புறத்தின் கீழ் உள்ள ............. என்பதைக் கிளிக் செய்த உடன் நிரல்களின் பட்டியல்கள் திரையில் காட்டப்படும். **விடை: START**
7. ஸ்கிராச்சு சாளரத்தில் பின்னணிக்கு மேல் பகுதியில் உள்ள கணினி மாந்தர்களை ............. என்பர். **விடை: ஸ்பிரைட்டுகள்**
8. ஸ்கிராச்சு சாளரத்தில் பின்னணி நிறத்தை மாற்ற உதவுவது ........... ஆகும். **விடை: ஸ்டேஜ்**
9. ஸ்கிராச்சு என்பது ............. ஆகும். **விடை: காட்சி நிரல் மொழி**
10. படம் வரைவதற்கும், தொகுத்தலுக்கும் தேவையான செயலி ....... ஆகும். **விடை: பெயிண்ட்**
11. ஸ்கிராச்சு திருத்தியில் உள்ள பகுதிகள் ............. **விடை: 3**
12. ஸ்கிராச்சு சாளரத்தில் கணினி மாந்தர்களை ............. என்பர். **விடை: ஸ்பிரைட்**
13. பிளாக்குகளைத் தேர்வு செய்ய பயன்படுவது ....... ஆகும். **விடை: Block Pallete**
14. ஸ்கிராச் சாளரத்தில் கிடைக்கும் பின்னணி ........... என்பர். **விடை: ஸ்டேஜ்**

## II. பொருத்துக.

1.

| பகுதி I | | பகுதி II | |
|---|---|---|---|
| 1. | ஸ்டேஜ் | அ) | நிரல் கட்டமைப்பு |
| 2. | ஸ்பிரைட் | ஆ) | புதிய பிளாக்கு வகை தேர்வு செய்தல் |
| 3. | ஸ்கிரிப்ட் ஏரியா | இ) | மாந்தர்கள் |
| 4. | Block Menu | ஈ) | பின்னணி |

**விடை: 1 - ஈ, 2 - இ, 3 - அ, 4 - ஆ**

2.

| பகுதி I | | பகுதி II | |
|---|---|---|---|
| 1. | நோட்பேடு | அ) | படங்கள் வரைதல் |
| 2. | பெயிண்டு | ஆ) | குறிப்புகள் |
| 3. | லினக்ஸ் | இ) | காட்சி தொடர்பு சாதனம் |
| 4. | திரைப்படம் | ஈ) | இயக்க அமைப்பு |

**விடை: 1 - ஆ, 2 - அ, 3 - இ, 4 - ஈ**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## III. பின் வரும் கூற்றுகள் சரியா, தவறா எனக்கூறு. தவறு எனில் கூற்றினைத் திருத்துக.

**1. லினக்ஸ் என்பது பல்வேறு பயன்பாட்டுக்கு உதவக்கூடியது.**

**விடை:** தவறு. **சரியான கூற்று :** லினக்ஸ் என்பது **இயக்க மென்பொருள்.**

**2. ஸ்கிராச்சு கேலிச் சித்திரங்களை வெளிப்படுத்தும் மென்பொருள்.**

**விடை:** சரி.

**3. சாளரத்தின் பின்னணி நிறத்தை ஸ்டேஜ் மூலமாக மாற்றலாம்.**

**விடை:** சரி.

## IV. குறுவினாக்கள்.

**1. கோப்பு மற்றும் கோப்புத் தொகுப்பு வேறுபடுத்துக.**

**விடை:**

| எண். | கோப்பு | கோப்புத் தொகுப்பு |
|---|---|---|
| 1. | கணினியில் இடம் பெற்றிருக்கும் செயலி மூலம் உருவாக்கப்படும் எந்த ஒரு வெளியீடும் கோப்பு ஆகும். | பல கோப்புகளை உள்ளடக்கிய பெட்டகம் கோப்புத் தொகுப்பு ஆகும். |
| 2. | கோப்புகளினுள் கோப்புத் தொகுப்பு இருக்க முடியாது. | கோப்புத் தொகுப்பில் பல கோப்புகள் காணப்படுகின்றன. |

**2. காட்சி தொடர்பு சாதனங்களைப் பற்றி எழுது.**

**விடை:** படங்கள் வழியாக குறிப்பிட்ட கருத்தினை நமக்கு எளிதில் புரிய வைப்பது காட்சித் தொடர்பு சாதனங்கள் ஆகும். உதாரணமாக நிழற்படங்கள், ஒலி, ஒளிப்படங்கள், வரைபடங்கள், அசைவூட்டப்படங்கள் போன்ற அனைத்தையும் கணினியின் உதவியுடன் எளிதாகச் செய்ய முடியும். காட்சித் தொடர்பு சாதனத்துக்குத் திரைப்படம் ஒரு சிறந்த சான்றாகும்.

☆ ☆ ☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



# அலகுத் தேர்வு

காலம் : 60 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 25

## பகுதி - I

**சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுது.** (4 × 1 = 4)

**1. நிரல் (script) உருவாக்கப் பயன்படுவது எது?**
அ) Script area ஆ) Block palette இ) Stage ஈ) Sprite

**2. விண்டோஸ் மற்றும் லினக்ஸ் போன்றவை ........... க்கு உதாரணம் ஆகும்.**
அ) கோப்பு ஆ) கோப்புத் தொகுப்பு இ) இயக்க அமைப்பு ஈ) நிரல்

**3. ஸ்கிரிப்ட் செயலியை திறப்பதற்கு எந்த பொத்தானை அழுத்த வேண்டும்?**
அ) பச்சை கொடி ஆ) சிவப்பு கொடி இ) நீலக் கொடி ஈ) மஞ்சள் கொடி

**4. பிளாக்குகளை (Block) உருவாக்க பயன்படுவது எது?**
அ) Block palette ஆ) Block menu இ) Script area ஈ) Sprite

## பகுதி - II

**விடையளி.** (3 × 2 = 6)

5. (i) ஸ்கிராச்சு சாளரத்தில் பின்னணி நிறத்தை மாற்ற உதவுவது ............ ஆகும்.
(ii) பிளாக்குகளைத் தேர்வு செய்ய பயன்படுவது ....... ஆகும்.

**6. சரியா தவறா எனக்கூறு தவறு எனில் சரியான கூற்றை எழுது.**
(i) லினக்ஸ் என்பது பல்வேறு பயன்பாட்டுக்கு உதவக்கூடியது.
(ii) சாளரத்தின் பின்னணி நிறத்தை ஸ்டேஜ் மூலமாக மாற்றலாம்.

7. மேடை (STAGE) என்றால் என்ன?

## பகுதி - III

**விடையளி.** (2 × 4 = 8)

**8. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | நோட்பேடு | அ. | படங்கள் வரைதல் |
| 2. | பெயிண்டு | ஆ. | குறிப்புகள் |
| 3. | லினக்ஸ் | இ. | காட்சி தொடர்பு சாதனம் |
| 4. | திரைப்படம் | ஈ. | இயக்க அமைப்பு |

9. ஸ்கிராச்சு (SCRATCH) என்றால் என்ன?

## பகுதி - IV

**விரிவான விடையளி.** (1 × 7 = 7)

**10.** **(i)** கோப்பு மற்றும் கோப்புத் தொகுப்பு வேறுபடுத்துக.
**(ii)** திருத்தி (EDITOR) குறித்தும் அதன் வகைகள் குறித்தும் எழுது.

☆ ☆ ☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

10ஆம் வகுப்பு

## அரையாண்டுத் தேர்வு - டிசம்பர் - 2024-25

பதிவு எண்.

## அறிவியல்

(விடைகளுடன்)

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 75

### பகுதி – I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** $12 \times 1 = 12$

1. புவி ஈர்ப்பு முடுக்கம் g ன் அலகு $ms^{-2}$ ஆகும், இது கீழ்காண் அலகுகளில் எதற்கு சமமாகும்.
   அ) $cms^{-1}$ ஆ) $Nkg^{-1}$
   இ) $N m^2 Kg^{-1}$ ஈ) $cm^2s^{-2}$
2. ஒரு லென்சின் திறன் –4D எனில் அதன் குவியத் தொலைவு
   அ) 4 மீ ஆ) –40 மீ
   இ) –0.25 மீ ஈ) –2.5 மீ
3. காமா கதிரியக்கத்திலிருந்து நம்மைப் பாதுகாக்க _____ உறைகள் பயன்படுகின்றன.
   அ) காரீய ஆக்சைடு ஆ) இரும்பு
   இ) காரீயம் ஈ) அலுமினியம்
4. திட்ட வெப்ப அழுத்த நிலையில் 1 மோல் ஈரணு மூலக்கூறு வாயுவின் பருமன்
   அ) 11.2 லி ஆ) 5.6 லி
   இ) 22.4 லி ஈ) 44.8 லி
5. கீழ்க்கண்டவற்றுள் எது சர்வக் கரைப்பான் எனப்படுவது ____________.
   அ) அசிட்டோன் ஆ) பென்சீன்
   இ) நீர் ஈ) ஆல்கஹால்
6. TFM என்பது சோப்பின் எந்த பகுதிப் பொருளைக் குறிக்கிறது.
   அ) தாது உப்பு ஆ) வைட்டமின்
   இ) கொழுப்பு அமிலம்
   ஈ) கார்போஹைட்ரேட்
7. ஒளிச்சேர்க்கையின் வேதியியல் நிகழ்வுகளை கண்டறிந்தவர் யார்?
   அ) C.N.R. ராவ் ஆ) கோலிக்கர்
   இ) சாக்ஸ்
   ஈ) மெல்வின் கால்வின்
8. அட்டையின் மூளை இதற்கு மேலே உள்ளது.
   அ) வாய் ஆ) வாய்க்குழி
   இ) தொண்டை ஈ) தீனிப்பை
9. கீழுள்ளவற்றில் நரம்புச் செல்களில் காணப்படாதது?
   அ) நியூரிலெம்மா ஆ) சார்கோலெம்மா
   இ) ஆக்ஸான் ஈ) டெண்டிரான்கள்
10. கீழ்க்கண்டவற்றில் எது IUCD?
    அ) காப்பர் - டி
    ஆ) மாத்திரைகள்
    இ) கருத்தடை திரைச்சவ்வு
    ஈ) அண்ட நாளத் துண்டிப்பு
11. சென்ட்ரோமியர் மையத்தில் காணப்படுவது __________ வகை குரோமோசோம்.
    அ) டீலோ சென்ட்ரிக்
    ஆ) மெட்டா சென்ட்ரிக்
    இ) சப் - மெட்டா சென்ட்ரிக்
    ஈ) அக்ரோ சென்ட்ரிக்
12. பல கோப்புகள் சேமிக்கப்படும் இடம் _______.
    அ) கோப்புத் தொகுப்பு
    ஆ) பெட்டி
    இ) Paint
    ஈ) ஸ்கேனர்

### பகுதி – II

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி. வினா எண் 22-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** $7 \times 2 = 14$

13. நியூட்டனின் இரண்டாம் விதியினைக் கூறு.
14. குவிலென்சு ஒன்றில் F மற்றும் 2F புள்ளிகளுக்கு இடையே பொருள் வைக்கப்படும் போது உருவாக்கப்படும் பிம்பத்திற்கான கதிர் வரைபடம் வரைக.
15. ஜுல் வெப்ப விதி வரையறு.
16. அணுக்கட்டு எண் - வரையறு.
17. கோடிட்ட இடங்களை நிரப்புக.
    அ) அல்கைனின் பொதுவான மூலக்கூறு வாய்ப்பாடு __________.
    ஆ) 100% தூய ஆல்கஹால் _________ என்று அழைக்கப்படுகிறது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



18. Rh காரணியைக் கண்டறிந்தவர் யார்? அது ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றது?
19. செயற்கை ஆக்சின்கள் என்பவை யாவை? எ.கா. தருக.
20. ஆண்களின் இரண்டாம் நிலை இனப்பெருக்க உறுப்புகளைக் கூறுக.
21. மெட்டாஸ்டாசிஸ் என்றால் என்ன?
22. ஒரு ராடான் மாதிரியிலிருந்து ஒரு வினாடியில் $3.7\times10^3$ GBq கதிரியக்கம் வெளியாகிறது எனில் இச்சிதைவினை கியூரி அலகாக மாற்றுக.

## பகுதி – III

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 32-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** $7 \times 4 = 28$

23. அ) ஒளியின் ஏதேனும் நான்கு பண்புகளைக் கூறுக.
24. அ) மின்னோட்டத்தின் அலகை வரையறு.
    ஆ) மின் தடை எண் மற்றும் மின் கடத்து எண் ஆகியவற்றை வேறுபடுத்துக.
25. அ) உலோகக் கலவை என்றால் என்ன?
    ஆ) இருமடிக் கரைசல் என்றால் எனன?
26. அ) ஈரம் உறிஞ்சும் சேர்மங்களுக்கும், ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்களுக்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை?
27. ஒரு விதையிலைத் தாவர வேர் மற்றும் இருவிதையிலை தாவர வேர் இடையேயுள்ள வேறுபாட்டினை எழுதுக.
28. தாவரங்கள் எவ்வாறு நீரை உறிஞ்சுகின்றன. விவரி.
29. வாயு நிலையில் உள்ள தாவர ஹார்மோன் எது? தாவரங்களில் அதன் மூன்று செயல்பாடுகளை எழுதுக.
30. வட்டார இனத் தாவரவியல் என்பதை வரையறுத்து அதன் முக்கியத்துவத்தை எழுதுக.
31. காடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறுக.
32. அ) பொட்டாசியம் குளோரைடு நீர்க்கரைசலை சில்வர்நைட்ரேட் நீர்க்கரைசலுடன் சேர்க்கும் பொழுது வெண்மை நிற வீழ்படிவு உண்டாகிறது. இவ்வினையின் வேதிச் சமன்பாட்டைத் தருக.
    ஆ) ஒரு கரைசலின் $P^H$ மதிப்பு 4.5 எனில் $P^{OH}$ மதிப்பைக் காண்க.

## பகுதி – IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி.** $3 \times 7 = 21$

33. அ) (i) ஒரு கலோரி வரையறு.
    (ii) உந்த மாறாக் கோட்பாட்டை கூறி அதனை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) (i) டாப்ளர் விளைவு நடைபெற முடியாத இரண்டு சூழல்களைக் கூறுக.
    (ii) கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் கட்டுப்பாடற்ற தொடர்வினையை விளக்குக.

34. அ) (i) A என்பது வெள்ளியின் வெண்மை கொண்ட உலோகம். A ஆனது $O_2$ உடன் 800°C யில் வினைபுரிந்து B யை உருவாக்கும். A யின் உலோகக் கலவை விமானத்தின் பாகங்கள் செய்யப் பயன்படும். A மற்றும் B என்ன?
    (ii) நவீன அணுக் கொள்கையின் கோட்பாடுகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) (i) மீள் மற்றும் மீளா வினைகளை வேறுபடுத்துக.
    (ii) கரும்புச் சாறிலிருந்து எத்தனால் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

35. அ) (i) முயலின் பல் வாய்ப்பாட்டினை எழுதுக.
    (ii) நியூரான்கள் அவற்றின் அமைப்பின் அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது, என்பதை படத்துடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) (i) DNA விரல்ரேகைத் தொழில்நுட்பத்தின் நடைமுறை பயன்பாடுகளை எழுதுக.
    (ii) டி.என்.ஏ அமைப்பு எவ்வாறு உருவாகியுள்ளது? டி.என்.ஏ வின் உயிரியல் முக்கியத்துவம் யாது?

☆☆☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## விடைகள்

### பகுதி – I

1. (ஆ) $Nkg^{-1}$
2. (இ) –0.25 மீ
3. (இ) காரீயம்
4. (இ) 22.4 லி
5. (இ) நீர்
6. (இ) கொழுப்பு அமிலம்
7. (ஈ) மெல்வின் கால்வின்
8. (இ) தொண்டை
9. (ஆ) சார்கோலெம்மா
10. (அ) காப்பர் - டி
11. (ஆ) மெட்டா சென்ட்ரிக்
12. (அ) கோப்புத் தொகுப்பு

### பகுதி – II

13. பொருள் ஒன்றின் மீது செயல்படும் விசையானது அப்பொருளின் உந்த மாறுபாட்டு வீதத்திற்கு நேர்தகவில் அமையும். மேலும் இந்த உந்த மாறுபாடு விசையின் திசையிலேயே அமையும்.

$$F = m \times a$$

14.




15. ஜூல் வெப்ப விதியின் படி ஒரு மின்தடையில் உருவாகும் வெப்பமானது
   (i) அதன் வழியே பாயும் மின்னோட்டத்தின் இருமடிக்கு நேர்விகிதத்திலும்
   (ii) மின்தடைக்கு நேர் விகிதத்திலும்
   (iii) மின்னோட்டம் பாயும் காலத்திற்கு நேர் விகிதத்திலும் இருக்கும்.
   $H = I^2Rt$.

16. (i) மூலக்கூறில் உள்ள அணுக்களின் எண்ணிக்கையே அம்மூலக்கூறின் "அணுக்கட்டு எண்" ஆகும்.
   (ii) இவை நான்கு வகைப்படும். அவை 1. ஓரணு மூலக்கூறு, 2. ஈரணு மூலக்கூறு, 3. மூவணு மூலக்கூறு, 4. பல அணு மூலக்கூறு.

17. அ) $C_nH_{2n-2}$
   ஆ) தனி ஆல்கஹால்

18. Rh காரணியைக் கண்டறிந்தவர்கள் லேண்ட்ஸ்டெய்னர் மற்றும் வியன்னர். ரீசஸ் இனக்குரங்கின் இரத்தத்திலிருந்து Rh காரணி கண்டறியப்பட்டது. எனவே Rh காரணி என அழைக்கப்படுகிறது.

19. ஆக்சின்களை ஒத்த பண்புகளைக் கொண்ட செயற்கையாகத் தயாரிக்கப்படும் ஆக்சின்கள் 'செயற்கை ஆக்சின்கள்' என அழைக்கப்படுகின்றன.
   **எ.கா :** 2, 4D (2,4 டைகுளோரோ பீனாக்சி அசிட்டிக் அமிலம்)

20. விந்துக்குழல், எபிடிடைமிஸ், விந்துப்பை, புராஸ்டேட் சுரப்பி, ஆண்குறி போன்றவை ஆண்களின் இரண்டாம் நிலை இனப்பெருக்க உறுப்புகளாகும்.

21. புற்று செல்கள் உடலின் தொலைவிலுள்ள பாகங்களுக்கும் இடம் பெயர்ந்து, புதிய திசுக்களை அழிக்கின்றன. இந்நிகழ்வு மெட்டாஸ்டாசிஸ் என்று அழைக்கப்படுகிறது.

22. ஒரு கியூரி = $3.7 \times 10^{10}$ Bq
   (ஒரு வினாடியில் ஏற்படும் சிதைவு)

   **தீர்வு :**

   1 Bq = ஒரு வினாடியில் ஏற்படும் சிதைவு

   ஒரு கியூரி = $3.7 \times 10^{10}$ Bq

   1 Bq = $\frac{1}{3.7 \times 10^{10}}$ கியூரி

   $3.7 \times 10^3$ G Bq = $3.7 \times 10^3 \times 10^9 \times \frac{1}{3.7 \times 10^{10}}$

   = 100 கியூரி

### பகுதி – III

23. அ) (i) ஒளி என்பது ஒருவகை ஆற்றல்.
   (ii) ஒளி எப்போதும் நேர்க்கோட்டில் செல்கிறது.
   (iii) ஒளி பரவ ஊடகம் தேவையில்லை. வெற்றிடத்தின் வழியாகக் கூட ஒளிக்கதிர் செல்லும்.
   (iv) காற்றில் அல்லது வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் $C = 3 \times 10^8$ மீ வி$^{-1}$.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com



24. அ) மின்னோட்டத்தின் SI அலகு ஆம்பியர் (A). ஒரு கூலும் மின்னூட்டம் ஒரு விநாடி நேரத்தில் கடத்தியின் ஏதாவது ஒரு குறுக்குவெட்டுப் பகுதி வழியாக கடந்து செல்லும் போது அக்கடத்தியில் பாயும் மின்னோட்டம் ஒரு ஆம்பியர் என வரையறுக்கப்படுகிறது. $1 \text{ ஆம்பியர்} = \frac{1 \text{ கூலும்}}{1 \text{ விநாடி}}$

ஆ)

| எண். | மின்தடை எண் | மின் கடத்து எண் |
|---|---|---|
| (i) | ஒரு கடத்தியின் மின்தடை எண் என்பது அதன் வழியே பாயும் மின்னோட்டத்தினை எதிர்க்கும் திறனை குறிக்கும் அளவு. | மின் தடை எண்ணின் தலைகீழி மின் கடத்து எண். |
| (ii) | $\rho = \frac{RA}{L}$ | $\sigma = \frac{1}{\rho}$ |
| (iii) | இதன் அலகு ஓம் மீட்டர் ($\Omega$m) | இதன் அலகு ஓம்$^{-1}$ மீ$^{-1}$ (அ) மோ மீ$^{-1}$ |

25. அ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்கள் அல்லது உலோகங்களும், அலோகங்களும் சேர்ந்த ஒரு படித்தான கலவையே உலோகக்கலவை ஆகும்.

ஆ) ஒரு கரைபொருளையும், ஒரு கரைப்பானையும் கொண்டிருக்கும் கரைசல் இருமடிக்கரைசல் எனப்படும்.

26. அ)

| எண். | ஈரம் உறிஞ்சும் சேர்மங்கள் | ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்கள் |
|---|---|---|
| (i) | சாதாரண வெப்ப நிலையில், வளி மண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது அதிலுள்ள ஈரத்தை உறிஞ்சுகிறது. ஆனால் கரைவதில்லை. | சாதாரண வெப்பநிலையில், வளிமண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது அதிலுள்ள ஈரத்தை உறிஞ்சிக் கரைகிறது. |
| (ii) | வளிமண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது தன்னுடைய இயற்பியல் நிலையை இழப்பதில்லை. | வளிமண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது தன்னுடைய இயற்பியல் நிலையை இழக்கிறது. |
| (iii) | படிக உருவமற்ற திண்மங்களாகவோ, திரவங்களாகவோ காணப்படுகின்றன. | இவை படிக திண்மங்களாக மட்டுமே காணப்படுகின்றன. |
| (iv) | **(எ.கா.)** சுட்ட சுண்ணாம்பு (Cao) | **(எ.கா.)** சோடியம் ஹைட்ராக்ஸைடு (KOH) |

27.

| எண் | திசுக்கள் | ஒரு விதையிலைத் தாவர வேர் | இரு விதையிலைத் தாவர வேர் |
|---|---|---|---|
| 1. | சைலக்கற்றைகளின் எண்ணிக்கை | பலமுனை சைலம் | நான்குமுனை சைலம் |
| 2. | கேம்பியம் | காணப்படவில்லை | காணப்படுகிறது (இரண்டாம் நிலை வளர்ச்சியின் பொழுது மட்டும்) |
| 3. | இரண்டாம் நிலை வளர்ச்சி | இல்லை | உண்டு |
| 4. | பித் அல்லது மெட்டுல்லா | உண்டு | இல்லை |

28. அ) **நீரை உள்ளெடுக்கும் உறுப்புகள் – வேர்த்தூவி :**

(i) ஒரு தாவர வேரின் நுனியில் பல கோடிக்கணக்கான வேர்த்தூவிகள் காணப்படுகின்றன. இவை மண்ணிலிருந்து நீரையும், கனிமங்களையும் உறிஞ்சுகின்றன.

(ii) வேர்த்தூவிகள் தாவரத்தின் உறிஞ்சும் பரப்பினை அதிகரிக்கின்றன.

**உறிஞ்சப்பட்ட நீர் வேரில் செல்லும் பாதை :**

(i) நீரானது வேர்த்தூவியினுள் சென்றவுடன் நீரின் செறிவானது புறணிப் பகுதியை விட வேர்த்தூவியில் அதிகமாக உள்ளது.

(ii) ஆகவே நீரானது சவ்வூடு பரவலின் காரணமாக வேர்த்தூவியிலிருந்து புறணி செல்கள் வழியாக அகத்தோலில் நுழைந்து சைலத்தை அடைகிறது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(iii) பின்பு சைலத்திலிருந்து நீரானது மேல்நோக்கி தண்டு மற்றும் இலைகளுக்கு கடத்தப்படுகிறது.




**மண்ணிலிருந்து வேர்த்தூவியின் வழியாக சைலத்திற்கு நீர் செல்லும் பாதை**

**வேர் செல்களில் நீர் செல்லும் வழிமுறைகள்:** வேர்த்தூவியின் மூலம் உறிஞ்சப்பட்ட நீரானது வேரின் உட்புற அடுக்கிற்கு இரண்டு தனித்தனி வழிகளில் செல்கின்றன. அவை

(i) அப்போபிளாஸ்ட் வழி
(ii) சிம்பிளாஸ்ட் வழி

(i) **அப்போபிளாஸ்ட் வழி :**
- ✦ அப்போபிளாஸ்ட் வழியில் நீரானது முழுக்க முழுக்க செல்சுவர் மற்றும் செல் இடைவெளியின் வழியாகச் செல்கிறது.
- ✦ இந்த வகை கடத்துதல் செறிவின் அடிப்படையில் அமைந்துள்ளது.

(ii) **சிம்பிளாஸ்ட் வழி :**
- ✦ இம்முறையில் நீரானது செல்லின் பிளாஸ்மா சவ்வில் நுழைந்து சைட்டோபிளாசத்தினை கடந்து பிளாஸ்மோடெஸ்மேட்டா வழியாக அருகிலுள்ள செல்களுக்கு செல்கிறது.
- ✦ செல்சவ்வின் வழியாக நீர் செல்வதால் இவ்வகை கடத்துதல் மெதுவாக நடைபெறுகிறது.
- ✦ சிம்பிளாஸ்ட் வகை கடத்துதல் செறிவு சரிவின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

29. வாயு நிலையில் உள்ள தாவர ஹார்மோன் எத்திலின் ஆகும்.

**அதன் செயல்பாடுகள் :**

(i) கனிகள் பழுப்பதை ஊக்குவிக்கின்றது. எ.கா. தக்காளி, ஆப்பிள், மா, வாழை.
(ii) இருவிதையிலைத் தாவரங்களில் வேர் மற்றும் தண்டு நீட்சி அடைவதைத் தடைசெய்கிறது.
(iii) இலைகள் மற்றும் மலர்கள் மூப்படைவதை விரைவுபடுத்துகிறது.

30. வட்டார இனத் தாவரவியல் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள தாவரங்கள் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வழி வழியாக எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பற்றி அறிவதாகும்.

**வட்டார இன தாவரவியலின் முக்கியத்துவம் :**

(i) பரம்பரை பரம்பரையாகத் தாவரங்களின் பயன்களை அறிய முடிகிறது.
(ii) நமக்குத் தெரிந்த மற்றும் தெரியாத தாவரங்களின் பயன்களைப் பற்றிய தகவலை அளிக்கிறது.
(iii) வட்டார இனத் தாவரவியலானது மருந்தாளுநர், வேதியியல் வல்லுநர், மூலிகை மருத்துவப் பயிற்சியாளர் முதலானோருக்குப் பயன்படும் தகவல்களை அளிக்கிறது.
(iv) மலைவாழ் பழங்குடி மக்கள் மருத்துவ இன அறிவியல் மூலம் பலவகையான நோய்களைக் குணப்படுத்தும் மருந்துத் தாவரங்களை அறிந்து வைத்துள்ளனர்.

31. (i) காடு என்பது அடர்ந்த மரங்கள், புதர்கள், சிறுசெடிகள், கொடிகள் போன்றவற்றை உள்ளடக்கிய பல்வேறு தாவர மற்றும் விலங்கினங்களின் வாழிடமாகும்.
(ii) காடுகள் நமது நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கிய பங்களிப்பவை. காடுகள் மனித வாழ்விற்கு இன்றியமையாதவை.
(iii) மேலும் பலதரப்பட்ட புதுப்பிக்கத்தக்க இயற்கை வளங்களின் ஆதாரமாகவும் விளங்குபவை.
(iv) காடுகள், மரம், உணவு தீவனம். நார்கள் மற்றும் மருந்துப் பொருட்களை அளிப்பவை.

32. அ) $KCl_{(aq)} + AgNO_{3\,(aq)} \rightarrow KNO_{3\,(aq)} + AgCl_{(s)} \downarrow$.
இது ஒரு வீழ்படிவாதல் வினை.

ஆ)
$$pH + pOH = 14$$
$$pOH = 14 - pH$$
$$pOH = 14 - 4.5 = 9.5$$
$$pOH = 9.5$$

## பகுதி - IV

33. அ)
(i) ஒரு கிராம் நிறையுள்ள நீரின் வெப்பநிலையை 1°C உயர்த்தத் தேவைப்படும் வெப்ப ஆற்றலின் அளவு ஒரு கலோரி என வரையறுக்கப்படுகிறது.
(ii) **உந்த மாறாக் கோட்பாடு :** புற விசை ஏதும் தாக்காத வரையில் ஒரு பொருள் அல்லது ஓர் அமைப்பின் மீது செயல்படும் மொத்த நேர்க்கோட்டு உந்தம் மாறாமல் இருக்கும்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**நிரூபணம் :**




நேர்க்கோட்டு உந்த அழிவின்மை விதியினை நிரூபித்தல்

(i) A மற்றும் B என்ற இரு பொருட்களின் நிறைகள் முறையே $m_1$ மற்றும் $m_2$ என்க.

(ii) $u_1$ மற்றும் $u_2$ என்பவை அவற்றின் ஆரம்ப திசை வேகங்களாக கொள்வோம்.

(iii) பொருள் A-ஆனது, B-ஐ விட அதிக திசைவேகத்தில்செல்வதாக கருதுவோம். $(u_1 > u_2)$.

(iv) 't' என்ற கால இடைவெளியில் பொருள் A-னது, B மீது மோதலை ஏற்படுத்துகிறது.

(v) மோதலுக்குப் பிறகு அப்பொருள்கள் அதே நேர்க்கோட்டில் $v_1$ மற்றும் $v_2$ திசைவேகத்தில் பயணிப்பதாக கொள்வோம்.

(vi) நியூட்டனின் இரண்டாம் விதிப்படி, B-யின் மீது A-ன் விசை

$$F_A = \frac{m_2(v_2 - u_2)}{t}$$

A யின் மீது B-ன் விசை $F_B = \frac{m_1(v_1 - u_1)}{t}$

(vii) நியூட்டனின் மூன்றாம் விதிப்படி, A-ன் மீது செயல்படும் விசையானது B-ன் மீது செயல்படும் எதிர்விசைக்கு சமம்.

$$F_B = -F_A$$

$$\frac{m_1(v_1 - u_1)}{t} = -\frac{m_2(v_2 - u_2)}{t}$$

$$m_1v_1 + m_2v_2 = m_1u_1 + m_2u_2$$

(viii) மேற்காண் சமன்பாடு, மோதலுக்கு பின் உள்ள மொத்த உந்த மதிப்பு, மோதலுக்கு முன் உள்ள மொத்த உந்த மதிப்பிற்கு சமம் என்பதை காட்டுகிறது.

(ix) இது பொருளின் மீது செயல்படும் மொத்த உந்தம் ஒரு மாறிலி என்ற நேர்க்கோட்டு உந்த அழிவின்மை விதியினை நிரூபிக்கிறது.

**(அல்லது)**

ஆ) (i)

(1) ஒலி மூலம் (S) மற்றும் கேட்குநர் (L) இரண்டும் ஓய்வு நிலையில் இருக்கும் போது.

(2) ஒலி மூலம் (S) மற்றும் கேட்குநர் (L) சமஇடைவெளியில் நகரும்போது.

(3) ஒலி மூலமும், கேட்குநரும் ஒன்றுக்கொன்று செங்குத்தாக நகரும்போது.

**(ii) அ) கட்டுப்படுத்தப்பட்ட தொடர்வினை :**

(i) இவ்வகை தொடர்வினையில் வெளிவரும் நியூட்ரான்களின் எண்ணிக்கை 'ஒன்று' என்ற அளவில் பராமரிக்கப்படுகிறது.

(ii) உட்கவரும் பொருட்களைக் கொண்டு வெளிவரும் நியூட்ரான்களில் ஒரே ஒரு நியூட்ரானை மட்டும் தொடர்வினைக்கு அனுமதித்து, மற்ற நியூட்ரான்கள் உட்கவரப்படுகின்றன.

(iii) இத்தொடர் வினையின் மூலம் வெளியேற்றப்படும் ஆற்றல் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

(iv) அணுக்கரு உலையில் முழுவதும் நிலைநிறுத்தப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட ஆற்றலை உருவாக்க பயன்படுத்தப்படுகிறது.

**ஆ) கட்டுப்பாடற்ற தொடர்வினை :**

(i) இவ்வகை தொடர்வினையில் எண்ணற்றநியூட்ரான்கள் பெருக்கமும், அதன் காரணமாகப் பிளவும் அதிகமாக பிளவுப் பொருள்களும் உருவாகின்றன.

(ii) இதன் முடிவில் ஒரு விநாடிக்குள் அதிகமாக ஆற்றல் வெளியேறுகின்றது.

(iii) இவ்வகை தொடர்வினையைப் பயன்படுத்தி அணு குண்டு வெடித்தல் நிகழ்த்தப்படுகிறது.

34. அ) (i) வெள்ளியின் வெண்மை கொண்ட A உலோகம் அலுமினியம் ஆகும்.

$$\underset{(A)}{4\,Al + 3O_2} \xrightarrow{800°C} \underset{(B)}{2Al_2O_3}$$

(அலுமினியம் ஆக்சைடு)

**முடிவு :**

| குறியீடு | வாய்பாடு | பெயர் |
|---|---|---|
| A | Al | அலுமினியம் |
| B | $Al_2O_3$ | அலுமினியம் ஆக்சைடு |

(ii) (i) அணு என்பது பிளக்கக்கூடிய துகள்.

(ii) ஒரே தனிமத்தின் அணுக்கள் வெவ்வேறு அணு நிறைகளைப் பெற்றுள்ளன.

(iii) வெவ்வேறு தனிமங்களின் அணுக்கள் ஒரே அணுநிறைகளைப் பெற்றுள்ளன.

(iv) அணுவை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஒரு தனிமத்தின் அணுக்களை மற்றொரு தனிமத்தின் அணுக்களாக மாற்ற முடியும்.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(v) அணுவானது எளிய முழு எண்களின் விகிதத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

**(அல்லது)**

ஆ) (i)

| | மீள் வினை | மீளா வினை |
|---|---|---|
| (i) | தகுந்த சூழ்நிலையில் முன்னோக்கு மற்றும் பின்னோக்கு வினைகள் நடைபெறும். | முன்னோக்கு வினை மட்டும் நடைபெறும் (பின்னோக்கு வினை நடைபெறாது). |
| (ii) | முன்னோக்கு மற்றும் பின்னோக்கு வினைகள் ஒரே நேரத்தில் நடைபெறும். | ஒரே திசையில் மட்டுமே நடைபெறும் வினை முன்னோக்கு வினையாகும். |
| (iii) | வினையானது சமநிலையை அடையும். | வினையானது சமநிலையை அடையாது. |

(ii) **எத்தனால் தயாரிக்கும் முறை :**

(i) தொழிற்சாலைகளில் கரும்புச் சாறின் கழிவுப்பாகிலிருந்து நொதித்தல் முறையில் எத்தனால் தயாரிக்கப்படுகிறது.

(ii) கழிவுப்பாகு என்பது செறிவுமிகுந்த கரும்புச் சர்க்கரை கரைசலிலிருந்து சர்க்கரையை படிகமாக்கும் பொழுது மீதமுள்ள ஆழ்ந்த நிறமுள்ள கூழ் போன்ற திரவமாகும்.

(iii) இதில் 30% சுக்ரோஸ் உள்ளது. இதை படிகமாக்கல் முறையில் பிரித்தெடுக்க இயலாது.

1. **கழிவுப்பாகினை நீர்த்தல் :** கழிவுப்பாகிலுள்ள சர்க்கரையின் செறிவு 8 லிருந்து 10 சதவீதமாக நீரினால் நீர்க்கப்படுகிறது.

2. **அம்மோனியம் உப்புகள் சேர்த்தல் :**

(i) நொதித்தலின் போது ஈஸ்ட்டிற்குத் தேவையான நைட்ரஜன் கலந்த உணவினைக் கழிவுப்பாகு கொண்டுள்ளது.

(ii) நைட்ரஜன் அளவு குறைவாக இருப்பின், அம்மோனியம் சல்பேட் அல்லது அம்மோனியம் பாஸ்பேட் சேர்ப்பதன் மூலம் உரமூட்டப்படுகிறது.

3. **ஈஸ்ட் சேர்த்தல் :**

(i) படி 2-இல் கிடைக்கும் கரைசல் பெரிய நொதித்தல் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு பின்னர் ஈஸ்ட் சேர்க்கப்படுகிறது.

(ii) கலவை 303K வெப்பநிலையில் சில நாட்களுக்கு வைக்கப்படுகிறது. அந்த நாட்களில் ஈஸ்ட்டிலுள்ள இன்வர்டேஸ் மற்றும் சைமேஸ் ஆகிய நொதிகள் சர்க்கரையை எத்தனாலாக மாற்றுகின்றன.

$$\underset{\text{சர்க்கரை}}{C_{12}H_{22}O_{11}} + H_2O \xrightarrow{\text{இன்வர்டேஸ்}} \underset{\text{குளுக்கோஸ்}}{C_6H_{12}O_6} + \underset{\text{ப்ரோக்டோஸ்}}{C_6H_{12}O_6}$$

$$\underset{\text{குளுக்கோஸ்}}{C_6H_{12}O_6} \xrightarrow{\text{சைமேஸ்}} \underset{\text{எத்தனால்}}{2C_2H_5OH} + 2\,CO_2$$

நொதித்த நீர்மம் கழுவு நீர்மம் என அழைக்கப்படுகிறது.

4. **கழுவு நீர்மத்தைக் காய்ச்சி வடித்தல் :**

(i) 15 முதல் 18 சதவீதம் ஆல்கஹாலும் மீதிப்பகுதி நீராகவும் உள்ள நொதித்த நீர்மமானது பின்னக் காய்ச்சி வடித்தலுக்கு உட்படுத்தப்படுகிறது.

(ii) முக்கியப் பின்னப்பகுதியாகக் கிடைத்த எத்தனாலின் நீர்க்கரைசல் 95.5% எத்தனாலையும் 4.5% நீரையும் பெற்றுள்ளது. இது எரிசாராயம் என அழைக்கப்படுகிறது.

(iii) இக்கலவை சுமார் 5 லிருந்து 6 மணி நேரம் சுட்ட சுண்ணாம்பு சேர்த்து காய்ச்சி வடிக்கப்பட்டு 12 மணி நேரம் வைக்கப்படுகிறது.

(iv) இக்கலவை மீண்டும் காய்ச்சி வடிக்கப்படும் போது தூய ஆல்கஹால் (100%) கிடைக்கிறது. இந்தத் தூய ஆல்கஹால் தனி ஆல்கஹால் எனப்படுகிறது.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



35. அ) (i) முயலின் பல் வாய்பாடு $\left(I\frac{2}{1}, C\frac{0}{0}, PM\frac{3}{2}, M\frac{3}{3}\right)$ இது பின்வருமாறு எழுதப்படும் $= \frac{2033}{1023}$.

(ii) அமைப்பின் அடிப்படையில் நியூரான்கள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.




(1) ஒருமுனை நியூரான்கள்
(2) இருமுனை நியூரான்கள்
(3) பலமுனை நியூரான்கள்

**(1) ஒருமுனை நியூரான்கள் :**
(i) இவ்வகை நியூரான்களில் ஒருமுனை மட்டுமே சைட்டானில் இருந்து கிளைத்து காணப்படும்.
(ii) இதுவே ஆக்சான் மற்றும் டெண்டிரானாக செயல்படும்.
(iii) **அமைவிடம் :** வளர்கருவின் ஆரம்ப நிலையில் மட்டும் காணப்படும்.

**(2) இரு முனை நியூரான்கள் :**
(i) சைட்டானிலிருந்து இரு நரம்புப் பகுதிகள் இருபுறமும் இணைக்கப்பட்டிருக்கும்.
(ii) ஒன்று ஆக்சானாகவும் மற்றொன்று டெண்டிரானாகவும் செயல்படும்.
(iii) **அமைவிடம்:** கண்ணின் விழித்திரையிலும், நாசித்துளையில் உள்ள ஆல்∴பேக்டரி எபீதிலியத்திலும் காணப்படும்.

**(3) பலமுனை நியூரான்கள் :**
(i) சைட்டானிலிருந்து பல டெண்ட்ரான்கள் கிளைத்து ஒரு முனையிலும், ஆக்சான் ஒரு முனையிலும் காணப்படும்.
(ii) **அமைவிடம் :** மூளையின் புறப்பரப்பான பெருமூளைப் புறணியில் காணப்படும்.

**(அல்லது)**

ஆ) (i) **டி.என்.ஏ. விரல் ரேகைத் தொழில்நுட்பத்தின் நடைமுறைப் பயன்பாடுகள் :**
(i) டி.என்.ஏ. விரல் ரேகைத் தொழில் நுட்பமானது தடயவியல் பயன்பாடுகளில் குற்றவாளிகளை அடையாளம் காணப் பயன்படுகிறது.
(ii) இது ஒரு குழந்தையின் தந்தையை அடையாளம் காண்பதில் ஏற்படும் சர்ச்சைகளுக்கு தீர்வு காணவும் பயன்படுகிறது.
(iii) இது உயிரினத் தொகையின் மரபியல் வேறுபாடுகள், பரிணாமம் மற்றும் இனமாதல் ஆகியவற்றை அறிய உதவுகிறது.

(ii) **I. வாட்சன் மற்றும் கிரிக்கின் டி.என்.ஏ. மாதிரி:**
(i) டி.என்.ஏ மூலக்கூறு இரண்டு பாலிநியூக்ளியோடைடு இழைகளால் ஆனது.
(ii) இந்த இழைகள் இரட்டைச் சுருள் அமைப்பை உருவாக்குகின்றன. இவ்விழைகள் ஒன்றுக்கொன்று எதிர் இணை இயல்புடன் எதிரெதிர் திசைகளில் செல்கின்றன.
(iii) மையத்தில் உள்ள நைட்ரஜன் காரங்கள், சர்க்கரை - பாஸ்பேட் தொகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுதிகள் டி.என்.ஏ.வின் முதுகெலும்பாக உள்ளன.




(iv) நைட்ரஜன் காரங்கள் எப்பொழுதும் ஹைட்ரஜன் பிணைப்புகளால் இணைக்கப்படுகின்றன.
(1) அடினைன் (A) தைமினுடன் (T) இரண்டு ஹைட்ரஜன் பிணைப்புகளால் இணைக்கப்பட்டுள்ளது. (A= T)
(2) சைட்டோசின் (C) குவானைனுடன் (G) மூன்று ஹைட்ரஜன் பிணைப்புகளால் இணைக்கப்பட்டுள்ளது.(C ≡ G) இத்தகைய இணைவுறுதல் நிரப்பு கார இணைவுறுதல் என்று அழைக்கப்படுகிறது.
(v) இரட்டைச் சுருள் அமைப்பின் ஒவ்வொரு சுற்றும் 34 A° (3.4nm) அளவிலானது. ஒரு முழு சுற்றில் பத்து கார இணைகள் உள்ளன.
(vi) இரட்டைச் சுருளில் உள்ள நியூக்ளியோடைடுகள் பாஸ்போ டை எஸ்டர் பிணைப்புகளால் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

**II. உயிரியல் முக்கியத்துவம் :**
(i) இது மரபியல் தகவல்களை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்துகிறது.
(ii) இது புரதங்கள் உருவாக்கத்திற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுள்ளது.
(iii) ஒரு உயிரினத்தின் வளர்ச்சிசார் மற்றும் வாழ்வியல் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துகிறது.

☆☆☆



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com